அக்டோபர் - 22

**"நான் குடிக்கும் பாத்திரத்தில் குடிக்க உங்களால் கூடுமா? " - மத் 20 : 22.**

நெருக்கமான வழியில் நடந்த கர்த்தரின் தைரியம் நம்மை வியப்பால் ஆழ்த்துகிறது. எவ்வளவு ஒரு பலமான குணம் அவருக்கு இருந்திருக்கிறது. பின்னிட்டுத் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் மற்றவர்களுக்காகத் தன்னையே பலியிட்டு இவ்விதமாக பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் அவர் மனவுறுதியுடையவராயிருந்தார். மனத்தாழ்மையில் மேன்மை, ஊழியத்தின் மூலமாக ஜெயம் கொள்ளுதல் ஆகிய இவைகளைக் கொண்ட ஒரு உயர்ந்த மாதிரியை அப்போஸ்தலர் தங்களுக்கு முன்னிலையில் கண்டார்கள். அவருடைய பாத்திரத்தில் நாம் பங்கு கொண்டாலொழிய அவருடைய மகிமையின் ராஜ்யத்தில் ஒரு பங்கும் கிடைக்காது என்பதை நமது மனதின் முன் தெளிவாக வைத்திருப்பது நல்லதாயிருக்கிறது. இந்த அவசியமான அனுபவத்தைப்பெற, மற்ற எல்லாக் காரியங்களையும், நஷ்டமும் குப்பையுமென்று எண்ணுவோமாக. இந்த அனுபவம் நம்மிடத்தில் வரும்போது, நாம் பயப்படாதிருப்போமாக. நம்மை சோதிக்கிற பற்றி எரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையானதென்று நமக்கு நேர்ந்திருக்கிறது என்று திகையாமலிருப்போமாக. அதற்குமாறாக இப்பொழுது நாம் கர்த்தரோடு துன்பம் அனுபவித்து, கொஞ்சக் காலஞ்சென்று ராஜ்யத்தில் அவரோடு கூட இருப்பதற்கென்றே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். **- Z ’04, 138, 139 (R 3362)**

பாத்திரம் ஆனந்தத்தின் அனுபவங்களையும், துக்கத்தின் அனுபவங்களையும் சங்கேதத்தினால் தெரிவிக்கிறது. பொதுவாகப் பேசுகையில் நம்முடைய கர்த்தரின் பாத்திரம் யோர்தான் முதல் கல்வாரி வரையுள்ள தன்னுடைய அனுபவங்களைக் கொண்டதாயிருந்தாலும், பாத்திரம் அதனுடைய இறுதியான அர்த்தத்தில் ஒரு புறம்பே தள்ளப்பட்டவரைப் போலவும், பிரதிஷ்டை செய்யப்பட்டவரைப் போலவும், தேவ தூஷணத்திற்காகவும், கலகத்திற்காகவும், கிடைத்த தண்டனையின் கீழ் மரித்துக் கொண்டிருந்த அவரின் மேல் குவிக்கப்பட்ட அவமானத்தையும், கனவீனத்தையும் குறிக்கிறது. நாம் அவருடையவர்களாக இருந்தோமானால், ஒத்த அனுபவங்களை அனுபவிக்க சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். நாமோ இதைச் செய்யத் தகுதியற்றவர்களாயிருக்கிறோம். ஆனால் தேவனின் ஆவியையும், வார்த்தையையும், பராமரிப்புக்களையும் உண்மையாக உபயோகிக்கும் பொழுது அவைகளின் உபயோகம் கர்த்தரோடு அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ண நம்மை இஷ்டமுள்ளவர்களாக்கவும், திறமையுள்ளவர்களாக்கவும் நமக்கு அவசியமான விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும், கீழ்ப்படிதலையும் கொடுக்கும். **- P ’36, 111.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோவா 4:6; 11:33,34; 12:27; அப் 3:18; 17:3; 2கொரி 1:5; பிலி 2:7,8; எபி 4:15; 5:7;12:2,3; ரோம 6:1-11; 8:10,17; 1கொரி 15:29-34; 2கொரி 4:8-10; பிலி 3:10; கொலோ 1:24; 2தீமோ 2:10-12; எபி 13:10-13; 1பேது 2:21-23; 4:12-14**

**கோபுர வாசிப்பு : Z ’14, 382 (R 5599).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணினேனா? எப்படி? ஏன்? இடையூறாக இருந்தது எது? உதவியாக இருந்தது எது? பலன் என்ன?**